# சங்கத்தமிழ்மாலை முப்பது

## 25-12-49

இவ்வருஷம் விரோதியாயிருந்தும் விருத்தமொன்று இல்லாமலே இம்மாநகரில் இம்மார்கழி மாதம் உஷத்காலத்தில் நடக்கும் பகவராதானங்களையும் திருப்பாவை அநுஸந்தானங்கள்,காலக்ஷேபங்கள் உபன்யாஸங்கள் இவைகளையும் பற்றி நினைத்து நினைத்து பரம ஸந்தோஷத்தை அடையலானேன்.

இவ்வித சிலாக்யதமமான ஆசார அநுஷ்டானங்களை நான் ஆழ்ந்து ஆலோசித்தபொழுது அந்த பரம உத்தமமான திருப்பாவையாகிய காவிய ரத்னத்தை மேலான ரீதியிலேயே ரஸானுபவம் செய்துகொண்டு ஸ்ரீவைஷ்ணவர்களும் தமிழ் அபிமானிகளும் அத்தியானந்தத்தை அடைந்தவர்களாய் இருப்பார்களேயானால் இன்னும் அவ்வாச்சர்யமான காவியத்தில் காவியப்பெயர் முதல் முப்பது பாசுரங்களிலும் அதனுடைய விபாகங்களிலும் ஒவ்வொரு பாசுரத்திலும் ஒவ்வொரடியிலும், ஒவ்வொரு பதத்திலும் ஆழ்ந்து கிடக்கும் அர்த்தங்களையும் ரஸங்களையும் அறிந்து அனுபவிக்க நேரிட்டால் எவ்விதம் களிப்பார்களோ? என்று எண்ணி எண்ணி முடியவில்லை. இதைக்கருதியே யோசித்தே நான் அநேக வருஷங்களாய் ஆண்டாள் செய்தருளின திருப்பாவைக்கு அனேக ஸ்ரீவைஷ்ணவ ஆசார்யர்களும் வித்வான்களும் ஒன்று சேர்ந்து அந்த காவிய கௌஸ்துபத்துக்கு தகுந்த ரஸபரிதமான வியாக்யான ஸர்வஸ்வம் எழுதவேண்டும் என்று மனோராஜ்ஜியம் கொண்டிருந்த போதிலும் அது நிறைவேறும் காலம் கிட்டவில்லையே என்று துக்கித்தேயிருக்கிறேன்.

அது நிற்க: சிலகாலத்துக்குமுன் திருப்பாவையைக் குறித்துச் சில வார்த்தைகள் சொல்ல நேரிட்டபோது ஆண்டாள் இதில் கடைசிப் பசுரத்தில் (கோதை சொன்ன) “சங்கத்தமிழ்மாலைமுப்பதும் தப்பாமே” என்று அருளிச்செய்திருக்கும் பதங்களைக் கொண்டு அக்கவியரசியே தன்னுடைய திருப்பாவையைக் குறித்து நிர்த்தேசித்திருப்பதாய் தெரிய வரும் சில அம்சங்கலை விக்ஞாபித்துக்கொள்ளநேரிட்டது. ‘சொன்ன’ என்பதால் இக்காவியத்தைச் செய்தது தானன்று, சொன்னது மாத்திரமே என்றார். அதாவது கவிமார்க்கரீதியில் கவிகால் தாம் செய்யும் கவனங்களை தங்களுக்கும் தெரியாமலே உள்ளிருந்து பரவசமாய் வெளிவருவது என்பது அனேக மகாகவிகளுடைய அனுபவ விசேஷம்.அதுவுமன்றி பதங்களை அடுக்கி அடுக்கி தன்னைப் பெற்ற பெரியாழ்வாரின் மகிமையை “அனிபுதுவை பைங்கமலர்த் தண்தெரியல் பட்டர் பிரான்” என்று கொண்டாடி அப்பேர்பட்டவருடைய கோதை என்றதால் கோதை என்ற பதத்துக்கும் உண்டாயிருக்கிற வாக்விபவத்தையும் குறிப்பிட்டளாய் தான் சொன்ன என்ரதால் அத்தகைய பெரியாழ்வாரின் புத்திரி ஆனதினாலேயே தனக்கு அப்படி சொல்லும் சக்தி வாய்த்தது என்பதையும் நிர்த்தேசிக்கிறாள்.

அதுவுமன்றி “அணிபுதுவை” என்று ஆரம்பித்ததற்கு ஸூசனம் தான் சொன்ன திருப்பாவையானது ஈரிரண்டு மால்வரைத்தோள் திருமாலுக்கும் அணிபுதுவையாகும் என்று சமர்ப்பித்தனள் என்றால் மிகையாகாது. மேலும் பைங்கமலத்தண்தெரியல் பட்டர்பிரான் என்பதால் அப்பட்டர்பிரான் யாவஜ்ஜீவம் வடபத்ரசாயிக்கு விவிதமான தாமரைப்பூக்களால் குளிர்ந்த மாலைகள் கட்டிச் சாத்தினார் என்றதால் அவர் செய்த பாக்கியம் தான் தனக்கு சங்கத்தமிழ்மாலை செய்து சாத்தக்கூடிய பாக்கியமாக உண்டாயிற்று என்றாள் போலும்.

அதுவுமன்றி தான் செய்தருளின திருப்பாவையை சங்கத்தமிழ்மாலை என்று வ்யக்தமாக பெயரிட்டிருக்கிறாள்.தமிழ் பாஷையைஇலக்கிய ரீதியில் படித்தவர் யாவருக்கும் சங்கத்தமிழ் என்றால் மதுரைத்தமிழ்ச் சங்கக் காலங்களில் கையாளப்பட்ட தமிழ்பாஷை என்பதும் சங்கத்தமிழ் என்னும் பதச்சேர்க்கை அக்காலத்திய இலக்கணம் சொல், அர்த்தம்,தடை முதலியவைகளையே குறிக்கும் என்பதும் நிர்விவாதமான விஷயம். அப்படியிருக்க இப்ப்ரபந்தத்துக்கு தமிழ்பாஷையில் பரிசயாதிக்யம் இல்லாத ஸ்ரீவைஷ்ணவாசாரியர்கள் சங்கத்தமிழ் என்றால் ஸங்கம் அதாவது கூட்டம்,கூட்டமக அநுஸந்திக்கும் தமிழ் என்ற ரீதியாய் வியாக்கியானம் செய்துள்ளார்கள். இவ்விடத்தில் ஆண்டாள் சங்கத்தமிழ் என்று ஒரு கவியும் எழுதாத ரீதியில் குறிப்பிட்டு எழுதியிருப்பததால்தான் சங்ககாலத்தில் இராதவளாயினும் காவியமானது சங்கத்தமிழின் சொல்,பொருள்,இலக்கியம் இவைகளைக் கையாண்டு எழுதியிருப்பதாக வியக்தமாகத் தெரிவிருப்பதால் அச்சங்கத் தமிழின் ஆழமான பரிச்சயமுள்ள வித்துவான்களாலேயே முக்கியமாய் இந்தப் பிரபந்தம் வ்யாக்கியானம் செய்யப் படவேண்டும் என்பது என்னுடைய நிச்சயமான கொள்கை. அந்தப்பேறு இத்திருப்பாவைக்கு அநேக வ்யாக்யாதாக்கள் ஏற்பட்டிருந்தும் இதுவரையில் கிடைக்காமல் போனதைப் பற்றி சோகிக்கவேண்டியதாயிருக்கிறது. இக்காரணத்தால் அநேக அர்த்தப்பிசகுகள் மட்டுமன்றி பாடப் பிழைகளும் கூட தத்கால பிரதிகளில் ஏற்பட்டுள்ளன.ஆனாலிவ்விஷயங்களைக் குறித்து விஸ்தரிப்பதில் இங்கு நோக்கில்லை.

இதுவும் நிற்க: தமிழ்மாலை என்றாள் கவி. தன்னுடைய பாசுரங்களை பதங்களாகிற புஷ்பங்களால் கட்டப்பட்ட மாலையாகக் கருதுவது கவித சித்திரத்துக்கு மிகவும் ஒக்கும். ஸ்ரீவைஷ்ணவக் கோவில்களில் மந்திரபுஷ்பம் எனப்படுவது மந்திரங்களால் ஆகிய அர்ச்சனை என்று அர்த்தம். அவ்விதமே ஆண்டாள் இத்திருப்பாவையினால் பாமாலை செய்து சூடாது கொடுத்தாள் போலும் தன்னுடைய பிதாவான பெரியாழ்வார் பூமாலை கைங்கர்யம் செய்தவிடத்தில் தான் பாமாலை செய்து சூட்டினாள் என்பது வியக்தம். ஆனாலும் அநேக வ்யாக்யாதாக்கள் இத்திருப்பாவை முழுவதையுமேஒரே மாலையாகவும் ஆதலால் ஒவ்வொரு பாசுரமும் அம்மாலையில் பத்தி அல்லது பாகமாக நிர்த்தேசித்துஇருக்கிறார்கள். அது ஒப்புக்கொள்ளத்தக்கதல்ல. ஏனெனில் கவியே “மாலை முப்பது” என்றார். பிரபந்தமானது முப்பது பாசுரமடங்கியதால் ஒவ்வொரு பாசுரத்தையும் தனி மாலையாகக் கருதியே “சங்கத்தமிழ்மாலை முப்பதும்” என்று எண்ணிக்காட்டியுள்ளார். இதையே கவிஹ்ருதயம் என்பர். ஆதலால் ஒவ்வொரு பாசுரமும் தனிதனியே அழகாகக் கட்டப்பட்ட முழுமாலையாகக் கருதவேண்டும்.இதை ஒரு சபையில் சொன்னபொழுது அங்கிருந்த அநேகர் ஏதோ நான் புதிதாகக் கண்டுபிடித்துவிட்டதாக என்னைக் கொண்டாடினார்கள். அதற்கு நான் இந்த பஹுமானம் முப்பது என்பதை முப்பது என்று அறிந்த அறிவுக்கோ என்று கேட்க நேரிட்டது.இதனால் ஏற்படுவது யாதெனில் ஒவ்வொரு தனிப்பாசுரத்தையும் பிரத்யேகமாகசித்தரிக்கப்பட்ட ஒரு முழு மாலையாக நாம் சிந்தனை செய்து அதில் ஏற்பட்டிருக்கும் மொழிகளின் அழகையும்,கோர்வையையும் சேர்க்கையையும் வாஸனையையும் வரிசைகளையும் கோர்வையின் சித்திரத்தையும் முழுமலையாக எப்படி முடிந்திருக்கிறது என்ற விசித்திரத்தையும் கண்டறிந்து அனுபவிக்கக்கடவோமாக.

மேலும் இம்மஹாகவி முப்பதுஎன்று மாத்திரமேயல்லாமல்முப்பதும் என்று "உம்" சாரியைச் சேர்த்துத் தப்பாமே அதற்கு மேலும் சொல்லியுள்ளார்.அதனால் இப்பாசுரங்கள் முப்பதையும் ஒன்றுகூட விடாமலும்,வரிசை தப்பாமலும் அநுஸந்திக்கவேண்டும் என்று தெரிவித்திருப்பதால் பாசுரம் எழுதப்பட்ட வரிசை மாறாமலும் படித்தாலேயல்லாது இந்தப்பிரபந்தத்தின் முக்கியார்த்தங்களும், ரஹஸ்யார்த்தங்களும் த்வன்யார்த்தங்கள் என்று சொல்லப்படுமவைகளும் அன்யாபதேசம் எனப்படுமவையும் எல்லாம் ஸரிவர கிரஹிக்கபடவேண்டுமானால் முப்பதையும் கிரமமாய் வாயால் உரைப்பது மாத்திரமேயன்றி மாத்தறிய உரைத்துப்பார்த்தும் கண்டறியக்கூடுமே ஒழிய வேறு விதத்தில் முடியாது என்று தெரிவிக்கிறார். கவியே பின்பாதங்களில் இம்முப்பது மாலையையும் செங்கட்திருமுகத்துச் செல்வத்திருமாலுக்கு அணிய இரண்டு மால்வரைத்தோள் போதாதென்றோ ஈரிரண்டு மால்வரைத்திருதோளால் தான் அணியக் குதூகலித்ததாகத் தெரிவித்துள்ளார். இவ்விதமன்றோ மால்வரைத்திருத்தோள் மாலை முப்பதையும் ஆண்டாள் ஸமர்ப்பிக்க வேண்டி அணிந்து திருவருள் புரிந்ததாக ஸூசனை.

## 26-12-49(**கனைத்து**)

இவ்விதம் திருப்பாவை என்கிற விசித்திரக்காவியமானது கவியினாலேயே ஒவ்வொரு பாசுரமும் கணிசிக்கப்பட்டிருந்ததென்று அறிந்தவுடன் இலக்கிய விமரிச ரீதியில் அம்முப்பது மாலைகளுக்கும் ஏதாவது பெயர்கள் குறித்துள்ளார்களோ, அப்பெயர்களுக்கும் அந்தந்த பாசுர விஷயங்களுக்கும் ஏதாவது அர்த்த ஸம்பந்தம் ஸூசிப்பித்திருக்கிறாரோ என்று கண்டறிய அவசியம் ஏற்பட்டது. அவ்விதம் விசாரிக்கப்புகுந்ததும் அதிசீக்கிரத்திலேயேஅப்படித்தான் இருக்கவேண்டும் என்கிற நிச்சயமும் மனதில் த்ருடமாயது. அநேக விமரிசனங்களால் அநேக ஆச்சரியமான அர்த்தங்களும் அனுபவங்களும் இப்பாசுரங்களில் நிரம்பித்ததும்பி இருக்கின்றன என்று ஏற்பட்டாலும் அவைகளைப்பற்றியெல்லாம் எழுதப்புகுவது கூடாத காரியம். ஆதலால் இப்பொழுது எடுத்துக்கொண்ட முப்பது பாசுரங்களும் எவ்விதமாக எப்பெயரால் எவ்வர்த்தத்தை சூசிப்பிக்கக் கவி யோசித்திருக்கக்கூடும் என்பதே நம்முடைய் தனி முயற்சியாகும்.

இலக்கணக் கிரந்தங்களிலிருந்துஇலக்கிய கிரந்தங்களை சீர்தூக்கிப் பார்ப்பது பழயதோர் வழக்கே அப்படியிருக்க அவ்வோ இலக்கியக் கிரந்தங்களிலிருந்தே கவியால் சூசிக்கப்பட்டிருக்கிற லக்ஷணங்கள் யாவை என்று நிர்த்தாரணம் செய்வதும் அநேக பாஷைகளில் கையாளப்படும் முறை என்பதில் ஸந்தேஹம் சிறிதுமில்லை.அவ்வழியை அநுஸரித்தும் இத்திவ்யப்பிரபந்தத்தில் நாம் கண்டறியக் கூடிய அதிசயங்கள் எண்ணற்றன.

முதலில் முதல் பாசுரத்தில் பரத்வ நிர்ணயம் செய்து கடைசிப் பாசுரத்தில் பிரம்மானந்தம் அடைவதையே குறித்துள்ளார் கவி. இந்த ரீதியையே அநுஸரித்தே ஆண்டாள் முறையே பகவத்பக்தியால் கிடைக்கக்கூடிய விவித லாபங்களையெல்லாம் வர்ணித்துப் பிறகு அந்த பகவத் பக்தியானது தூங்கிக் கிடக்கிற ஆத்மாக்களால் அடைய முடியாதென்று வெவ்வேறு காரணங்களால் உறக்கத்திலிருந்து எழாமலும், எழமுடியாமலுமிருக்கிற ஜீவகோடிகளை எழுப்பிப் பிறகு நம்முடைய அசிரத்தையாலும், தௌர்பாக்கியத்தாலும் வாசற்கதவையும் சாத்தி தூங்கவிடப்பட்ட ஸர்வந்தர்யாமியாகிற ஸ்ரீகிருஷ்ணனையும் எழுப்பினவர்களாய் அவனைக் கண்டு களித்து ஆராதித்துப் பிறார்த்தித்து வேண்டிய வரங்களையும் பெற்று அதிலும் திருப்தியடையாதவர்களாய் 'எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும்' அவனோடு உற்றவர்களாய் அவனுக்கே ஆட்செய்யும் பேறையே வேண்டி பிரம்மானந்தபரிதர்களாக ஆகக்கூடிய படிப்படியான மார்க்கத்தை விசித்திரமாய் வர்ணித்திருக்கிறாரன்றோ கவி!

இவ்வழியைக்கொண்டே நாம் ஆராய்ச்சி செய்ய, ஒவ்வொரு பாசுரத்திலும் கடைவரியில் அம்மாலைகள் முப்பதில் ஒன்றான மாலையின் பெயரையும் மற்றும் முதல் வரியில் ஆரம்பித்து முன்னுள்ள பாதங்களின் கருத்தையும் அக்கருத்துக்கும் அப்பாசுர மாலையின் பெயருக்கும் உள்ள சம்பந்தத்தையும் நிர்த்தேசித்துள்ளார் என்பது நன்கு விளங்கும். இதனடியில் நான் இவ்விதம் கண்டறிந்த யோஜனைகளை விவரமாய் ரஸிக வித்வான்களுடைய கவனத்துக்குக் அளித்திருக்கிறேனேயொழிய நான் சொல்லியிருப்பதே தத்துவம் என்றாவது முடிவுரை என்றாவது எவ்விதத்திலும் நினைத்தேனில்லை.ஆதலால் அவைகளை இவ்வுத்தம காவியத்தில் ஆதரமுள்ள அனைவர்களும் மேலும் மேலும் ஆராய்ச்சி செய்து அர்த்தானுபவங்களை அடைய ஒரு வியாஜமாகவே கருதக்கடவர்கள்.

### பாசுரம் 1 : மார்கழி

"நாராயணனே நமக்கே பறை தருவான்" என்று கண்டு கொண்ட ஆண்டாள் அவ்விதம் ஸ்ரீவைஷ்ணவர்கள் ஆனால் (நாம்) பெறக்கூடியது **"பாரோர் புகழ் மாலை"** என்றார்.

### பாசுரம் 2 : வையத்து

"வையத்து வாழ்வீர்காள்" உஜ்ஜீவனத்தை விரும்புகிறவர்களுக்கு இந்திரிய நிக்கிரஹமாகிற விரதாநுஷ்டாநாதிப் பிரம்மசர்யங்களே நடக்கவேண்டிய மார்க்கம் என்று காட்டியருளி "உய்யுமாறெண்ணி" உகப்பதே **"உஜ்ஜீவன மாலை" என்னலாம்.**

பாசுரம் 3 : ஓங்கி

ஓங்குவதே உத்தம வழி என்று இப்பாசுரத்தின் முகஸந்தியால் தெரிவித்த கவி மேற்சொன்ன மார்க்கத்தை அநுஸரித்து புருஷோத்தமனை வழிபட்டால் அதன்னல் மானிடர் பெறக்கூடியது பெருஞ்செல்வம் ஸச்சிதாநந்தம் என்று அப்பாசுரமாலை **நீங்காத நிறைந்த செல்வமாலை** என்றருளினார்.

பாசுரம் 4 : ஆழி

பகவத்னுக்ரஹத்தை நினைந்த இக்கவி இப்பாசுரத்தில் பகவானுடைய குளிர்ந்த ஆழ்ந்த கிருபா நேத்திரங்களை ஸ்மரித்து மானிட லோகத்துக்கே நீர்மழையும் கருணை மழையும் எல்லாம் அதே மூர்த்தியினின்றும் உண்டாவதைக் கணிசித்து அந்த தைவிகமான பகவதம்சமான மார்கழி மாதத்தில் பெறக்கூடிய பகவத்ஸம்ச்லேஷத்தில் ஈடுபட்டவளாய் இப்பாசுரத்தை **மார்கழி நீராட்டமாலை** என்று நிர்த்தேசித்திருக்கிறார்.

**பாசுரம் 5** : மாயன்

மேற்சொன்ன கிருபையாலும் பகவத் ஸம்ச்லேஷத்தாலும் மனித ஜன்மம் எடுத்தவர்களுக்குக் கிடைக்கக்கூடிய பிராரப்த ஸஞ்சித பாபங்களினின்றும் மோக்ஷமானது அகடிதகடனா ஸாமர்த்தியமுள்ள மாயனாலன்றி வேறொருவராலும் ஸாதிக்க முடியாது என்று சொல்லப்புகுந்து அப்பாபங்களெல்லாம் "தீயினிற்றூசாகும்" என்கிற ரீதியில் இப்பாசுர மாலையை **பாபநாசமாலை** என்று விளித்துள்ளார்.

பாசுரம் 6 : புள்ளும்

இவ்வாறாவது பாசுரம் முதல் பதினைந்தாவது பாசுரம் வரையில் ஆண்டாள் காவிய ரீதியில் தன்னுடைய தோழிமார்களைத் துயிலிலிருந்து எழுப்புவதாய் தூங்கிக்கொண்டிருக்கிற தன்னுடையவும் எல்லா ஜீவகோடிகளுடையவும் ஜீவாத்மாக்களும் ஸ்த்ரீப் பிராயமாய் புருஷோத்தமனைச் சேர்ந்து புருஷார்த்தத்தைப் பெறப் பிராப்தமாகையால் அத்தூக்கத்திலிருந்து கன் விழிப்பதற்கு உபகரணங்களாகிற சில சுருதிகளை நிர்த்தேசித்தவளாய் அதற்கு அவசியமாய் வேண்டியது ஹரிஸ்மரணம் என்பதைச் சொல்லி அந்த நாமம் காது வழியாயுள்ளத்தில் புகுந்த ஸம்ஸார தாபத்தினின்றும் நீங்இ குலிர்ச்சி பெறக்கூடும் என்றே **உள்ளங்குளிர்மாலை** என்ரு நாமமிட்டார் போலும்.

பாசுரம் 7 : கீசுகீசு

அரியென்ற பேர் அரவத்தால் துயில் எழாத ஒருத்தரை மற்றவித சப்தங்கள் எழுப்பாவிடினும் நாராயணமூர்த்தியான கேசவனைமற்ற ஆய்ச்சியர்கள் பாடுவதையும் கேட்டு சிரத்தையில்லாமல் தூங்கலாமோ,உன்னுடைய ஆத்மாவும் தேஜோரூபியன்றோ என்று தெரிவித்து நீயும் ஞான ஒளியை அடையப் பிராப்தம் என்றும் உத்ஸாஹப்படுத்தி அதற்கு அறிகுறியாய் **தேஜோமாலை** என்று நாமம் சாற்றினார்.

பாசுரம் 8 : கீழ்வானம்

இதில் ஒருத்தியை நோக்கி ஆண்டாள் நீ பிரம்மக்ஞானத்தில் குதூகலமுள்ளவளாயிற்றே? நாங்களும் கூடி சேவிக்கவந்திருக்கிறோம். பகவத் ஸேவையினால் மேலும் மேலும் பரஸ்பரம் ஆராய்ச்சியாகிற அருள் பிராப்தமாகும் என்று ஸூசிப்பித்து பாசுரத்துக்கு **ஆராய்ச்சியருள்மாலை** என்றார்.

பாசுரம் 9 தூமணி

இப்பாட்டில் இந்திரியாதி போகங்களால் வசீகரிக்கப்பட்டு அத்யாத்ம விஷயத்தில் புத்தியைச் செலுத்தாஒருத்தரை அவளுடைய பந்துக்களை கொண்டாவது எழுப்பி மேற்கண்ட ஆராய்ச்சியினால் கிடைக்கப்பெற்ற நாம சங்கீர்த்தன பலத்தைக் குறிப்பிட்டு **ஸஹஸ்ரநாமமாலை**யாக ஸூசனை.

பாசுரம் 10 நோற்று

ஒருத்தி நோன்புகள் நோற்று அதனால் கிடைக்ககூடிய ஸ்வர்க்கானுபவங்களையேப் போதுமாகக் கருதி அதற்கனுகுணமாகவே கண்விழிக்க ஒண்ணாத தூக்கத்தின் வசமாகி இருந்தும் இந்த தேஹம் படைத்த அருமையை அவளுக்கு ஞாபகப்படுத்தி உறக்கத்தை விலக்கி மனத்தையும் துலக்கி இரண்டு விதத்திலும் சாத்தியிருக்கும் கதவைத் திறக்கச் சொல்வதால் **தேற்றமாலை** எனலாம்.

**பாசுரம் 11** : **கற்று**

இப்பாசுரத்தில் ஐசுவர்யத்தின் அனுபவத்தில் வசப்பட்டு கூப்பிடவும் உறங்கும் ஒருத்தியைக் குறித்து அவ்விதம் உறங்குவது எவ்விதத்திலும் பிரயோஜனமில்லையாதலால் பொருளில்லாக் காரியங்களை நிவர்த்திக்க யோசித்து **பொருள்மாலை** என்றார்.

பாசுரம் 12 : கனைத்து

இப்பாசுரங்களில் முறையே வெவ்வேறு வீடுகளிலும் புகுந்து அங்கு உறங்கிகொண்டிருக்கும் கோபகன்னிகைகளை எழுப்புவதாகக் கவி ஒருவறு சொல்லியிருப்பினும் ஒரு பாசுரத்திலாவது எழுப்பப்பட்ட பெண்மணி எழுந்து வந்தார்கள் என்று கூடத் தெரிவிக்காமல் வியக்தமாய்ச் சொல்லாமல் வெவ்வேறுவிதமாக காரணங்கள் சொல்லி எழுப்புவதை யோசித்தால், ஒவ்வொரு ஆத்மாவும் வெவ்வேறு நிலைமை,ஸந்தர்ப்பம், குணாதிசயம் இவிஅகளை அடைந்திருக்ககூடுமாதலால் அவைகளுக்கேற்ப தகுந்த காரணங்களையும் வார்த்தைகளையும் சொல்லி ஆண்டாள் எழுப்புவாளாதலால் இப்பாசுரத்தில் கர்வத்தால் கூபிடுவதையும் லக்ஷியம் பண்ணாமலும், வாசல் திறவாமலும் உறங்உம் ஒருத்தியைக் கணிசித்து தனக்காக இல்லாவிட்டாலும் அவ்வளவு பேர் கூப்பிடவும் எழாவிட்டால் அதனால் அவளுக்கு உண்டாகும் அவமானத்தை நினைத்து எழுந்திருக்கட்டுமே என்று அவமானத்தைத் தவிர்க்ககூடிய **மானமாலை** என்று சூசிப்பித்திருகிறார்.

பாசுரம் 13 :புள்ளின்

மற்றொருத்தி எல்லோரும் வந்து பாடிக் கூப்பிடுவதையும் சட்டைசெய்யாது உறக்கத்தில் இருக்கும் ஆசையினால் இன்னும் தூங்குவது போல கள்ளத்தனம் செய்பவளைக் குறித்து இப்பாசுரத்தில் **கள்ளம்தவிர்மாலை** என்று நிர்த்தேசித்திருக்கிறார்.

பாசுரம் 14 : உங்கள்

இப்பாசுரத்தில் முந்தினநாளில் தானே முதலில் எழுந்து தானே மற்றவர்களை எழுப்புவதாக வாக்களித்து அதையும் மறந்து மனதில் ஒருவிதமான லஜ்ஜையுமின்றி தூங்குபவளை வேறுவழி இன்றி பங்கயக்கண்ணானைப் பாடும் ஆசையைக் காட்டி அப்படியாவது எழுந்திருப்பாளோ என்று இப்பாசுரத்திற்கு **பங்கயக்கண்ணான்** மாலை என்றார் போலும்.

பாசுரம் 15 எல்லே

கடைசியாக இப்பாசுரத்தில் கண்விழித்திருந்தும் எழுந்து வராமல் விதண்டாவாதம் ச்ய்யும் ஒருத்தியை பாடப்படும் தெய்வம் வல்லது, மாற்றழிக்கும் மாயத்தை தெய்வம் என்றெல்லாம் போதித்து நீ வராவிட்டால் அதனால் உனக்குக் கேடே வரும் என்றுதெரிவிதவர்களாய் அம்மாயனை எங்களுடன் சேர்ந்து பாடுவதே உசிதம் என்று **மாயன்மாலை** என்றார் போலும்.

**27.12.49**

பாசுரம் 16 : நாயகன்

மேல் பத்துப் பாசுரங்களும் கோபிகைகளையோ ஜீவாத்மாக்களையோ உற்க்கத்திலிருந்து எழுப்பி பகவத் ஸம்ச்லேஷத்துக்கு சேரும்படி சேர்த்தானதும் பகவானான க்ருஷ்ணனையல்லவோ போய்ச் சேரவேண்டும் என்று அறிந்தவர்களாய் அவளில்லம் போக அதுவும் சாத்திதாளிடப்பட்டிருப்பதைக் கண்டு நம் அவிவேகத்தால் நித்திரையே வேண்டாத அவனும் நித்திரைகொண்டான். எழுந்தானுமில்லை என்று கண்டறிந்து அவன் வீட்டு வாசலில் வாசற்காப்போன் இருப்பதைக் கண்டு அவனை நல்வார்த்தைகள் சொல்லி வாசல் கதவைத் திறந்து வைத்தாலொழிய பகவான் இருக்குமிடம் கூடத்தெரியாதாகையாலும் அவ்வாசற்காப்பானை வேறு விதமாக வசீகரணம் பண்ணமுடியாதாகையாலும் சிநேகபாவத்தைக் கொண்டு காரியத்தை முடித்துக் கொள்ளவேண்டியதாலும் **நேயமாலை** பாடுகிறாள் போலும்.

பாசுரம் 17 :அம்பரமே

வாசல்கதவு திறக்கப்பட்டதும் வயதுக் கிரமத்தில் பெரியவர்களை முதலில் எழுப்புவது தர்மமாதலின் நந்தகோபனையும், யசோதையையும் எழுப்பிப் பிறகு சிறுவர்களை எழுப்பத்தொடங்கி அப்போதும் பகவான் எழாமையைக் கண்டு பலராமனை விளித்து தானும் எழுந்து தம்பியையும் எழுப்புமாறு வேண்டுகிறவர்களாய் அவர்கள் உறங்கக் கூடாது என்கிற யோஜனையை ஸூசிப்பித்துச் சொன்னது **உறங்காமாலை** எனப்படலாம்

பாசுரம் 18: உந்து

அவ்விதம் எழுப்பப்பட்டும் பகவான் எழாதது கண்டு பலராமனுடைய புருஷகாரம் பலிக்காதது கண்டு பகவானுக்கு லக்ஷ்மீ ஸ்தானத்தில் விளங்கும் நப்பின்னைப் பிராட்டியை பொழுது விடிந்தது என்று கூவியழைத்தூன் கதவைத் திறந்தாலொழிய பகவானிடம் போகமுடியாதாகையால் அவ்விதமே திறக்குமாறு பிறார்த்திக்கிறதால் இதை **திறப்புமாலை** என்றார் போலும்.

பாசுரம் 19 : குத்து

அதற்கும் கதவு திறக்கப்படாமலிருக்க பகவானுக்காகவே அவனை எழுப்ப இஷ்டமில்லாதவளாய் தனக்கே எழுப்ப இஷ்டமில்லாதவளாய் இருக்கும் நப்பின்னையை அவள் அப்படி செய்வது தகாது என்று **தகவுமாலை** எனலாம்.

பாசுரம் 20 : முப்பத்து

அத்தாலும் தங்கள் பிரார்த்தனை நிறைவேறாதது கண்டு கவலையுற்றவர்களாய் இப்போதே வற்புறுத்துவதால் **விளம்பாஸஹத்வமாலை** என்னலாம்.

**பாசுரம் 21** : ஏற்ற

அடுத்த பாட்டில் அபராதங்கள் எல்லாவற்றையும் க்ஷமித்தருள அடிபணிய வந்து போற்றி நிற்பதைக் குறிப்பதால் இதை **போற்றும்** மாலை எனலாம்.

**பாசுரம் 22** : அங்கண்

இப்பாசுரத்தில் பகவானிடம் அணுகி அவனுடைய திவ்ய கடாக்ஷத்துக்குப் பாத்திரர்களாக பிரார்த்திக்கிறபடியால் இதை **கடாக்ஷமாலை** என்னலாம்.

**பாசுரம் 23** : மாரி

ஸிம்மம்போல் இருந்தாலொழிய ஸிம்மாஸனத்தில் வீற்றிருக்கக்கூடாதாகையால் அவ்விதச் சிங்காதனத்தில் ஏறியே யோசித்து எங்களுக்கு பகவந்நியமனம் கொடுக்கவேண்டும் என்று சொல்வதால் **பகவந்நியமனமாலை** என்னலாம்

**பாசுரம் 24** : அன்று
ஸிம்ஹாஸனத்தில் ஏறிய பகவானை பல்லாண்டு பாடி பகவானுடைய இரங்கலாகிற தயையைப் பிறார்த்திப்பதால் இதை **பகவத்கிருபாமாலை** என்னலாம்

**பாசுரம் 25** ஒருத்தி
கிடைத்த பகவத்கிருபையால் கைமேல் பலனாக எல்லா வருத்தமும் தீர்ந்ததாகச் சொல்லியிருப்பதால் **துக்கநிவாரணமாலை** என்னலாம்.

**பாசுரம் 26** :மாலே
துக்கநிவாரணம் ஆனதும் ஸந்தோஷப் பிராப்தி உண்டாகவேண்டுமாகையால் அதற்காக இந்த பாசுரத்தை **பகவத்நுக்ரஹமாலை** என்னலாம்.

**பாசுரம் 27** :கூடாரை
பகவத்நுக்ரஹம் கிடைத்ததும் அடுத்தபடியாக பகவத்ஸம்ச்லேஷமே ப்ராப்யமாகையால் **பகவத்ஸம்ச்லேஷமாலை** என்னலம்.

**பாசுரம் 28** :கறவை
அதற்குப் பிறகு நமக்குக் கிடைக்ககூடியதுபுருஷார்த்தமேயாகையால் இதை **புருஷார்த்தமாலை** என்று பெயரிடலாம்

பாசுரம் 29 : சிற்றம்
புருஷார்த்தம் கிடைத்ததும் உடனே ஜீவாத்மாவுக்குக் கிடைக்கவேண்டியது பகவானிடத்தில் விடாத பக்தியும் கைங்கர்யமும் ஆதலால் இது பாரமைகாந்த்யமாலை எனப்படலாம்.

பாசுரம் 30 : வங்கம்
கடைசியான இதில் பேரின்பமாகிற பிரம்மானந்தமாகையால் இதை **பிரம்மானந்தமாலை** என்பதே சரியாகும்.

**ஆண்டாள் திருவடிகளே சரணம்**

==========================================================================================

**திருப்பாவை - ஒரு விளக்கம்**

| பாசுர எண் | விளக்கம் |
|---|---|
| 1 - 5 | உபோத்காதம் - அர்த்தபஞ்கம் |
| 6 முதல்15 | பத்துவித அதிகாரிகள் |
| 6 பிள்ளாய் - | புதிதாக பகவத் விஷயத்த்தில் இழிந்தவன் (முக்தா) |
| 7 பேய்ப்பெண்ணே | ஞானமுண்டு ஆனால் பகவனுபவ ருசியில்லை |
| 8..கோதுகலமுடைய | பகவத்ராஸிக்யமுண்டு,ஆனால் உபாயமொன்றிலும் இழிய விரஹில்லை |
| 9. தூமணிமாடம் | பக்தியோகநிஷ்டன்,பஜனஸுகன் |
| 10.நோற்று(நம்மால் (போற்றப் பறைதரும்) | ப்ரபத்தியோகநிஷ்டன் |

| | |
|---|---|
| 11.கற்றுக்கறவை | பரிபூர்ணஞானாநுஷ்டாநயுக்தன் |
| 12.கனைத்து | கைங்கர்யஸ்ரீயையுடையவன் பக்கல் ஒதுங்கியிருப்பவன்-பாகவதநிஷ்டன் |
| 13.போதரிக்கண் | பகவதநுபவபூர்த்தியுள்ளவன் உன் அநுபவத்தைஎங்களுக்கும் கொடு |
| 14.உங்கள்(எங்களைமுன்னம்) | அனைவர்க்கும் தலைவர்,ஆசார்யகம் செய்யக்கூடியவர்(நாதஸதஸ்யூந:) |
| . எல்லே | பாகவதர்களைத்தள்ளி பகவதநுபவம் பெரிதென்றிருப்பவள் |
| 16.நாயகனாய் | தார்மிகர்கள் ப்ரஸாதம் |
| 17.அம்பரமே | எம்பெருமானைத்தாரகபோஷக போக்யமாய்க் கொண்டு ஆசார்யஸமாச்ரயணம் |
| 18.உந்து | புருஷகாரப்ரபத்தி |
| 19.குத்து | திவ்யதம்பதிகள் இருவரும் ப்ராப்யம் |
| 20.முப்பத்து | இருவரும் உபாயம் |
| 21.ஏற்ற ஊற்றமுடையாய் பெரியாய் | மஹாவிச்வாஸம் அங்கம் (சங்காபஞ்கங்களுக்கும் ஸமாதானம்) |
| 22.அங்கண் | அதிகாரத்தை உண்டாக்கும் ஆகிஞ்சந்யத்வம் (அபிமான பங்கம்) |
| 23.மாரிமலை | பெருமாளை அபிமுகமாய் நிற்க வேண்டுதல். |
| 24..அன்றிவ்வுலகம் | ஆநுகூல்ய ஸங்கல்பம் |
| 25.ஒருத்தி | ப்ராதிகூல்ய வர்ஜனம் |
| 26.மாலே | கோப்த்ருத்வ வரணம் இங்கு-அங்கு போகம் நீ |
| 27.கூடாரை | எய்தி; தேஹாவஸானே த்வம்சேத்ப்ரஸீதஸி |
| 28.கறவைகள் | கார்பண்யாநுஸந்தாநம் |
| 29.சிற்றம் | அங்கியான ப்ரபத்தி |
| 30.வங்கக்கடல் | புருஷார்த்தமான பலம் |

■ -- -- -- -- -- -- --

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 6.புள்ளும் | - | பொய்கையாழ்வார் | 7.கீசு கீசு | - | பேயாழ்வார் |
| 8.கீழ்வானம் | - | பூதத்தாழ்வார் . | 9.தூமணி | - | திருமழிசை |
| 10.நோற்று | - | தொண்டரடிபொடி | 11.கற்று | - | பெரியாழ்வார் |
| 12.கனைத்து | - | குலசேகரர் | 13.புள்ளின் | - | திருப்பாணாழ்வார் |
| 14.உங்கள் | - | நம்மாழ்வார் | 15.எல்லே | - | திருமங்கைமன்னன் |

*****************